நிரம்பி வழிந்தால்தான் காஞ்சிபுரம் பகுதிகளிலே வேகவதி ஆற்றிலே தண்ணீர் வருகின்ற வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த ஏரி நிரம்பி வழிய வேண்டும் என்பதற்காக அந்த ஏரிக்கு வருகின்ற கால்வாயைச் செப்பனிட்டு சிமெண்ட் கால்வாயாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்த ஏரியை ஆழப்படுத்தித்தர வேண்டும் என்கிற கேள்வியைத்தான் நான் கேட்டிருந்தேன். அந்த ஏரியை ஆழப்படுத்தினால் அதிலே வருகின்ற தண்ணீர் வேகவதி ஆற்றிலே விடப்பட்டு அந்த வேகவதி ஆற்றங்கரையிலே காஞ்சிபுரம் நகராட்சிக்குக் குடிதண்ணீருக்காக பம்ப் ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் அந்த ஏரியை நான் முக்கியமாக எடுத்துக்கொண்டு, அந்த ஏரிக் கால்வாயைச் செப்பனிட்டு தரவேண்டும் என்று கேட்டேன். இது தான் என்னுடைய கேள்வி. எனவே அந்தக் கால்வாயை செப்பனிட்டு . . . .

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தாமல் ஏரிக்குப் பாலாற்று அணைக்கட்டிலிருந்து வருகின்ற காவிரிப்பாக்கம் கால்வாயிலிருந்து கோவிந்தாபுரம் கால்வாய் பிரிகிறது. கோவிந்தாபுரம் கால்வாயிலிருந்துதான் தாமல் கால்வாய் 10 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பிரிந்து வந்து தாமல் ஏரியிலே கலக்கிறது. அந்த 10 கிலோ மீட்டர் தூரத்தைச் செப்பனிட வேண்டும் என்று பல இடங்களில் அது சேதாரம் அடைந்திருப்பதை எண்ணி அரசு அதைச் சீரமைக்க அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் குறித்து ஒரு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கரையைப் பலப்படுத்த தொடங்கப்பெற்ற வேலை 30—9—1989-ல் முடிக்கப்பட்டு விட்டது.

(10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

வெள்ளைக்கல் அணைத் திட்டம்.

*** 3552. திரு. பா. அப்துல்சமத் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வாணியம்பாடி தாலுகா ; வெள்ளைக்குட்டை அருகில், வெள்ளைக்கல் அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

வெள்ளைக்கல் அணைத்திட்டம் குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பா. அப்துல்சமத் : தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரின் குடிதண்ணீர் குறித்து பல்வேறுவிதமான ஆய்வுகள் வாரம் ஒரு முறை வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் நடத்திய ஆய்வுகளின்படி, ஆம்பூர் நகரில் பயன் படுத்தும் தண்ணீரினால் பலவிதமான நோய்கள் பரவும் சூழ்நிலை உள்ளது. ஆர்சனிக் என்று விஷ டெப்பாசிட்டுகள் பிறக்கும் குழந்தைகளை, கணிக்க முடியாத நோயினால் பாதிக்கும் சூழ் நிலை உள்ளது. அந்தத் தண்ணீர் தரம்கெட்ட நிலை நாடறியும் எனவே, நல்ல தண்ணீர் ஆம்பூர் மக்களுக்குக் கிடைக்கவும், பாலை வனமாக மாறிவரும் என்னுடைய மாவட்டத்தையும், என்னுடைய தாலுக்காவையும் காப்பாற்றவும் ஒரே வழி வெள்ளைக்கல் அணைத் திட்டம். அதை நிறைவேற்ற என் தொகுதியில் செயல் பட்டு வரும் உலக ஊதான் சேவை நிறுவனம் முன்வந்துள்ளது. அதன் தலைவர் பிஷப் அவர்களை நான் நேரில் சந்தித்து அதை முடித்துத் தரக் கேட்டேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கேட்டால் அனு மதிக்கப்படும். (குறுக்கீடு) கடைசிப் பகுதியைப் படித்தால் வினா வரும். (குறுக்கீடு)

திரு. பா. அப்துல்சமத் : அதற்கென்று ஆகின்ற செலவு ரூபாய் 10 மில்லியன் டாலர் ஆனாலும் அதைச் செய்து முடித்துக் கொடுக் கிறேன் என்று பிஷப் அவர்கள் வாக்குறுதி அளித்து இருக் கிறார்கள். ஆகவே, பூரா செலவினையும் அந்த நிறுவனம் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்துள்ளது. அதற்குரிய ஆவணங்களை திட்டமாகத் தயாரித்து, இந்த ஆண்டு இறுதிக்குள் அரசின் மூல மாக அளித்தால் வரும் ஜனவரியில் நடைபெற இருக்கின்ற அவர் களுடைய உலக மாநாட்டில் அதை வைத்து 'டானிடா' திட்டத் தினைப் போல் நிறைவேற்ற வாய்ப்பு உண்டு. தமிழக முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன வினாவா? (குறுக்கீடு) அடுத்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச் சரின் பதில்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். யாரோ ஒரு தனிப்பட்ட நிறுவனம் பணம் தருவதாகத் தெரிவித்திருப்பதாக உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார். அரசிற்கு இதுவரையில் அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் வரவில்லை. அப்படி வந்தால் அரசு நன்றியோடு அதைப் பெற்றுக் கொண்டு, உறுப்பினருடைய தொகுதியில் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், தன் கையிலே இருக்கிற கட்டுரையை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

பெவிகால் தயாரித்தல்.

* *1685.* **திரு. ஆலவயல் சுப்பையா :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில் பனையப்பட்டி அல்லது குழிபிறை பகுதிகளில் புளியங்கொட்டையிலிருந்து பெவிகால் தயாரிக்கும் சிறுதொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

புளியங்கொட்டையிலிருந்து 'பெவிகால்' வகையான பசைகள் தயாரிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. அந்தப் பகுதியில் 50,000-க்கும் மேற்பட்ட புளியமரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் வாழ்கின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து எனது தொகுதியில் பெவிகால் தயாரிக்கும் திட்டத்தை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெவிகால் போன்ற பசைகள் தயாரிப்பதற்கு 'பாலிவினைல் அசிடேட்' என்ற ரசாயனப் பொருள் தான் பயன்படுத்தப்படுகிறது. புளியங்கொட்டையி